

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் வட்டம் திருப்புவனம் காமராஜர் நகரில் கலைஞரின் கனவு இல்லம் கட்டுவதற்கான வேலை உத்தரவு மற்றும் வீட்டுமனை பட்டாவினை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம். ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர். மு.பாலகணேஷ், கும்பகோணம் சார் ஆட்சியர் ஹிருத்யா எஸ். விஜயன், மாவட்ட அவைத்தலைவர் க.நசீர்முகமது, ஒன்றியச் செயலாளர்கள் கூகூர் சி.அம்பிகாபதி, சுந்தர ஜெயபால், சரவணன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.




மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகர தி.மு.க. சார்பில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா, சட்ட போராட்டத்தில் வென்ற முதல்வர் தளபதிக்கு பாராட்டு விழா மற்றும் கழக அரசின் பட்ஜெட் விளக்க பொதுக் கூட்டம் மயிலாடுதுறை சின்னகடை வீதியில் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., சிறப்புரையாற்றினார். உடன் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., குத்தாலம் பி.கல்யாணம், எம். பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., என். இளையராஜா மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் , ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியின் 4 ஆண்டு காலச் சாதனைகள்!

முதல் பக்கத் தொடர்ச்சி




பட்வா சர்வதேசப் பயண விருது !

கடற்கரை முகப்புப் பகுதி மேம்பாட்டுப் பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டமைக்காக 28.3.2023 அன்று வழங்கப்பட்ட ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சக விருது !

காசநோயை ஒழிக்க தமிழ்நாடு எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டி - வாரணாசியில் 6.4.2023இல் நடைபெற்ற நிகழ்வில் தமிழ்நாட்டின் ஒன்பது மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட விருதுகள் !

காகிதம் இல்லாச் சட்டமன்றத் திட்டத்தினை மிகச் சிறப்பாகவும், விரைவாகவும் செயல்படுத்தியமைக்காக ஒன்றிய நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சகம் 3.7.2023 அன்று வழங்கிய விருது !

புதுடெல்லி பிரகதி மைதானத்தில் 20.11.2023 அன்று நடைபெற்ற உலக உணவுத் திருவிழாவில் - பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு, சிறு நிறுவனங்களின் சிறந்த செயல்திறனுக்காகத் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட விருது !

திருவைகுண்டம் அணைக்கு உலகப் பாரம்பரிய நீர்ப்பாசனக் கட்டமைப்புக்காக 21.11.2023 அன்று வழங்கப்பட்ட சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணைய விருது !

புதுடெல்லியில் குடியரசுதின விழா அணிவகுப்பில் பங்கேற்ற தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்திக்கு 30.1. 2024 அன்று வழங்கப்பட்ட தேசிய அளவில் மூன்றாம் இடம் பெற்ற விருது !

ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா அவர்கள் தேசிய அளவில் ஒட்டுமொத்த சிறந்த செயல்திறன் கொண்ட தருமபுரி சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 14.8.2024 அன்று வழங்கிய முதல் பரிசு !

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்திற்காக ஐ.நா.அமைப்பின் 2024 ஆம் ஆண்டிற்கான யுனைடெட் நேஷன், இண்டர்ஏஜென்சி டாஸ்க் போர்ஸ் விருதை (United Nation Interagency Task Force Award Smart Porche Award) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்

ஐ.நா. பிரகடனப்படி தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிகளுக்கு இந்திய அளவில் சிறந்த வங்கிச் சேவைக்காக 26.11.2024 அன்று ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா அவர்கள் தமிழ்நாடு கூட்டுறவு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களிடம் வழங்கிய விருது !

29.11.2024 அன்று புதுடெல்லி பிரகதி மைதானத்தில் நடைபெற்ற 43-வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சியின், “2047-இல் இந்தியா” என்ற கருப்பொருள் விளக்கக் காட்சிப்படுத்தலைச் சிறப்பாக அமைத்தமைக்காக தமிழ்நாடு அரங்கிற்கு வழங்கப்பட்ட மூன்றாம் விருது !

திருவாரூர் முத்துப்பேட்டை காவல் நிலையம், 2024-ஆம் ஆண்டில் சிறந்த காவல் நிலையம் என ஒன்றிய உள்துறை அமைச்சகம் வழங்கிய விருது.

25.4.2025 அன்று 2024-ஆம் ஆண்டிற்கான சிறந்த ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மை தேசிய விருது !

இவைபோல, ஒன்றிய அரசு வழங்கிய பல்வேறு விருதுகளுடன் தேசிய அளவிலும் மாநில அளவிலும் உள்ள பல்வேறு நிறுவனங்கள் திராவிட மாடல் அரசின் நிர்வாகத் திறனைப் பாராட்டிப் பல விருதுகளை வழங்கியுள்ளன.

இவைமட்டுமல்லாமல் பல்வேறு பத்திரிகை நிறுவனங்களும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியைப் பாராட்டி மிகப்பல விருதுகளை வழங்கியுள்ளன.

முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசு நான்காண்டு கால ஆட்சியில் நிகழ்த்தியுள்ள மகத்தான சாதனைகளுக்காக இதுவரை எந்த முதலமைச்சரும் பெற்றிராத வண்ணம் திசையெட்டும் போற்றிப் பாராட்டும் வண்ணம், ஒன்றிய அரசும், பல்வேறு நிறுவனங்களும், பத்திரிகைகளும் பாராட்டி வழங்கியுள்ள விருதுப் பட்டியலைக் காணும்போது, முதலமைச்சர் அவர்களை மிகச் சிறந்த நிர்வாக ஆளுமை மிகுந்தவர் எனப் பலரும் மகுடம் சூட்டுவது நமது தமிழ்நாட்டிற்குக் கிடைத்துள்ள தனிப் பெரும் சிறப்பாகும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருமயம், பொன்னமராவதி, அரிமளம் பகுதிகளைச் சார்ந்த

# மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள்!



புதுக்கோட்டை, மே 6 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

கற்பக விநாயகா மருத்துவக் கல்லூரியின் நிர்வாக மேலாண்மை இயக்குனரும் கல்வியாளருமான அண்ணாமலை ரகுபதி பிளஸ் டூ(+2) முடித்ததற்கு பின்னால் என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம், அதற்கு தமிழக அரசின் உதவிகளை எப்படி பெறலாம் என்று மாணவச் செல்வங்களுக்கு வழிகாட்ட தங்களது ஒவ்வொரு பள்ளிக்கும் கீழே குறிப்பிட்ட கால அட்டவணைப்படி வருகை தந்து வழிகாட்ட இருக்கின்றார்கள்.

அந்த வழிகாட்டுதலைப் பெற்று பயனடைய ஒவ்வொரு மாணவர்களும் தங்கள் பெற்றோர்களின் சொந்த பொறுப்பில் மே 6 மற்றும் மே7 தேதிகளில் அவர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் அந்தந்த பள்ளிகளுக்கு வருகை தந்து வழிகாட்டுதலைப் பெற்றுக் கொண்டும் அவர்களோடு கலந்துரையாடியும், மேலும் சிறப்பு பரிசுகளை பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

தலைமை ஆசிரிய பெருமக்கள் மேற்கண்ட நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்து வழிகாட்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

06.05.2025 செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணி கடியாப்பட்டி அரசு மேல் நிலைப்பள்ளி, 9.45 மணி அரிமளம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அரிமளம் அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளி, 10.30 மணி தாஞ்சூர் அரசு மேல்நிலைப்பள்ளி,11.15 மணி கழனிவாசல் அரசு மேல்நிலைப்பள்ளி, 12.00 மணி கீழாநிலைக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி,

12.45 மணி கல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளி, 02.00 மணி திருமயம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, திருமயம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, 02.45 மணி லெம்பலக்குடி அரசு மேல்நிலைப் பள்ளி, 03.30 மணி நற்சாந்துப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி,

04.15 மணி குழிபிறை அரசு மேல்நிலைப்பள்ளி,

07.05.2025 புதன்கிழமை காலை 09.00 மணி

மேலத்தாணியம் அரசு மேல்நிலைப்பள்ளி,09.45 மணி காரையூர் அரசு மேல்நிலைப்பள்ளி நல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளி, 10.30 மணி சடையம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி, 11.15 மணி நகரப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி, 12.00 மணி ஆலவயல் அரசு மேல்நிலைப்பள்ளி, 02.00 மணி பொன்.புதுப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி, வி.வி.எச்.எஸ்.எஸ் மேல்நிலைப்பள்ளி, 02.45 மணி மேலைச்சிவபுரி அரசு மேல்நிலைப்பள்ளி, 03.45 மணி பி.அழகாபுரி அரசு மேல்நிலைப்பள்ளி.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. அவசரச் செயற்குழுக் கூட்டம் இன்று (06.05.2025 செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணிக்கு விழுப்புரம், கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. அது சமயம் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள்** : 1) இந்திய ஒன்றியத்திற்கே ரோல் மாடலாக அதாவது முன்மாதிரியான முதல்வராக நிகழும் நமது கழக தலைவருக்கு பாராட்டு தெரிவித்தல்

2) கழக அரசின் 4 ஆண்டுகால சாதனைகளை மாவட்டம் முழுவதும் மக்கள் முன் எடுத்து செல்ல சாதனை விளக்க கூட்டங்கள் நடத்துவது

3) ஜுன் 1 அன்று மதுரையில் நடைபெற உள்ள கழக பொதுக்குழு கூட்டத்தில் மாவட்டத்திற்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொள்வது

4) மற்றும் கழக ஆக்கப் பணிகள்

டாக்டர் **இரா.இலட்சுமணன்** எம்.எல்.ஏ.,
பொறுப்பாளர் - விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க.

## தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில்

# தமிழ்நாடு முழுவதும் மண்டல அளவில் முப்பெரும் விழா!

## மாநில செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு!



கிருஷ்ணகிரி, மே 6 -

தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மாண்புமிகு முதல்வர் தளபதியார் பிறந்த நாள் முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் முப்பெரும் விழா மிக எழுச்சியோடு கொண்டாடப்படுகிறது.

அதனை ஒட்டி மாநில அமைப்புசரா ஓட்டுநர் அணி செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான டி. செங்குட்டுவன் விடுத்துள்ள அறிக்கையில் நாளை ( 07.05.2025 ) நேரம் காலை 10.00 மணி அளவில் மண்டலம் 1 சார்பில் திருநெல்வேலி வண்ணாரப்பேட்டை ஐந்தாவது வடக்கு பைபாஸ் ரோட்டில் உள்ள ஹோட்டல் அஃப்னா பார்க்கில் மண்டலம் 1ல் இடம் பெறும் மாவட்டங்கள் மற்றும் மாநகரங்கள்

கன்னியாகுமரி 2, திருநெல்வேலி 2, தென்காசி 2, விருதுநகர் 2, தேனி 2, திருநெல்வேலி மாநகர் 1, சிவகாசி மாநகர் 1, நாகர்கோவில் மாநகர் 1 உள்ளிட்ட மாவட்டங்கள் இடம்பெறுகின்றன. ( இதற்கு பொறுப்பாளராக எம்.சிவராஜ் செல் 9443141939 நியமிக்க ப்பட்டுள்ளார்)

மண்டலம் 2 நாள் 08.05.2025 காலை 10.00 மணி அளவில்

தூத்துக்குடி கலைஞர் அரங்கத்தில் மண்டலம் 2ல் இடம் பெறும் மாவட்டங்கள் மற்றும் மாநகரங்கள் இராமநாதபுரம் 1, சிவகங்கை, 1 தூத்துக்குடி 2, மதுரை 2, திண்டுக்கல் 2, மதுரை மாநகர் மாவட்டம் 1, தூத்துக்குடி மாநகர் 1, திண்டுக்கல் மாநகர் 1 (இதற்கு பொறுப்பாளராக ,மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை செயலாளர் ஏ.கே. பூபதி நியமிக்கபடுகிறார்) மண்டலம் 4 12.05.2025 அன்று காலை 10.00 மணி அளவில் கொங்கு வேளாளர் கலையரங்கம், சோமனூர், கருமத்தம்பட்டி, கோயமுத்தூரில் மண்டலம் 4 ல் இடம் பெறும் மாவட்டங்கள் மற்றும் மாநகரங்கள் கோவை 3, நீலகிரி 1, திருப்பூர் 4, கரூர் 1, ஈரோடு 3, நாமக்கல் 2 கோவை மாநகர் மாவட்டம் 1, திருப்பூர் மாநகர் 1, ஈரோடு மாநகர் 1, கரூர் மாநகர் 1 (இதற்கு பொறுப்பாளர்கள் K.தினகரன் Ex.MLA செல் 9842275296, மற்றும் Dr. RCM விஷ்ணுபிரபு, செல் 9486019999 ஆகியோர் நியமிக்கபடுகின்றனர் )

மண்டலம் 5 , 13.05.2025 அன்று காலை 10.00 மணி அளவில் விழுப்புரத்தில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது மண்டலம் 5 ல் இடம் பெறும் மாவட்டங்கள் மற்றும் மாநகரங்கள் கள்ளக்குறிச்சி 1, அரியலூர் 1, பெரம்பலூர் 1, கடலூர் 2, விழுப்புரம் 3, திருவண்ணாமலை 2, கடலூர் மாநகர் 1 இதற்கு பொறுப்பாளராக அருணகிரி செல் 9444400189, மற்றும் நெய்வேலிதங்கம் செல் 9884433366 மற்றும் கே. ஸ்ரீதர் செல் 9443712364 நியமிக்கப்படுகின்றனர் திருச்சி, தருமபுரி, சென்னை, பாண்டிச்சேரி மண்டலங்களில் நடைபெறும் முப்பெரும் விழா தேதி பின்னர் அறிவிக்கப் படும் .

எனவே மாநில முழுவதும் எழுச்சியோடு நடைபெற உள்ள இவ்விழாவில் அமைப்புசாரா ஓட்டுநர் அணி உள்ள அனைவரும் தவறாமல் பங்கேற்று விழாவை சிறப்பாக நடத்தி கொடுக்குமாறு மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



தலைமைக் கழக ஒப்புதலுடன் நியமிக்கப்பட்ட கோவை மாநகர் மாவட்ட பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பீளமேடு அண்ணாநகர் அலுவலகத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக்கிடம் வாழ்த்துப் பெற்றனர். இதில் பகுதிச் செயலாளர் மா.நாகராஜ், மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.தனபால், துணை அமைப்பாளர்கள் கே.பி.திருமலைராஜா, லாரா பிரேம் தேவ், கோவை அருண், இப்னு மசூது, துரை பிரவீண் உள்பட பகுதி இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## இராணி அண்ணா

### மே 6 (1996)



பேரறிஞர் அண்ணா அவர்களின் துணைவியாரும் ‘அண்ணியார்’ என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டவரும்; அண்ணா அவர்களின் பொதுவாழ்க்கைக்கு பெரிதும் உறுதுணையாக இருந்தவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் ராணி அம்மையார் அவர்களை தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக்கினார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.